# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.53/2024

dated : 02.07.2026

D.W. 5

Name பொன்னுதுரை

சாட்சி மீண்டும் மனுவின்பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தந்தை இறந்து போனார். எனக்கு 15 வயது இருக்கும்போது இறந்துபோனார். எனக்கு தற்போது 42 வயது ஆகிறது. என் அப்பாவிற்கு எழுத படிக்கத் தெரியும். அவர் எவ்வளவு படித்துள்ளார் என்று தெரியாது ஆனால் எழுத படிக்கத் தெரியும். அவர் வரவு செலவு நோட்டு எழுதியுள்ளார் என்று கேள்விப்பட்டுள்ளேன் அவை தற்போது இல்லை. என் தந்தை கையெழுத்திட்ட அசல் உயிலை நான் பார்த்தேன். என் வழக்கறிஞர் அலுவலகத்தில் பார்த்தேன். வழக்கறிஞர் அலுவலகத்தில் பார்த்த உயில் ஆவணத்தின் அடிப்படையில்தான் என் அப்பாவின் கையெழுத்தை உறுதி செய்தேன். பி.சா.ஆ.10 ஆவணத்தில் கடைசி பக்கத்தில் என் தந்தையின் கையெழுத்து உள்ளது. ஆவணத்தின் இறுதியில் காணப்படும் எழுத்துக்கள் ஆவண எழுத்தரால் எழுதப்பட்டது என்றும் அது கையொப்பமல்ல என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை இறந்த பின்னர் வாரிசு சான்று பெறவில்லை. 92 ம் பிரதிவாதி என் உறவினரா என்றால் என் உறவினர்தான்.

நான் வேலுச்சாமிதேவரின் மகன் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. வேலுச்சாமி தேவர் எழுத படிக்கத் தெரியாதவர் என்றும் அவர் கையொப்பம் ஏதும் செய்யவில்லை என்றும் நான் வேலுச்சாமி தேவரின் மகன் என்று கூறிக்கொண்டு 92, 93 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.07.02 18:19:57 +0530